யுடன் கூடிய சாய்வு இருக்கைகள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் உண்டா?

(இ) இல்லையெனில், அதுபற்றி நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) சென்னைக்கும் மதுரைக்குமிடையே ஓடும் மின்னல் வேகப் பேருந்துகளில் தற்போதுள்ள இருக்கை அமைப்பு சாய்ந்து கொள்வதற்கும் உறங்குவதற்கும் போதுமான அளவு வசதியுடையதாகவுள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, are there any radar equipment in these lightning buses against lightning ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, no such danger is envisaged now.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(1) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் குறித்து.

4–40 பி.ப. **மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் :** ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் பற்றிய அறிவிப்புகள் 6—2—1973 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு முன்னதாகச் செயலாளரிடம் சேர வேண்டும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : 1973-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் சனிக்கிழமையன்று மாலை 3-30 மணிக்கு நடைபெற்ற